**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 11.11.2025.**

| | |
|---|---|
| **Name : சந்தோஷ்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து டிசைன் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் மாமா ஆவார். கடந்த 15.10.2023 ம் தேதியன்று மாலை 3.15 மணிக்கு என் மாமா இரு சக்கர வாகனத்தில் மேச்சேரியிலிருந்து ஆண்டிக்கரை நோக்கி பணம் வாங்குவதற்காக சென்ற போது லாரி மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக என் மாமாவிற்கு கன்னம், தலை, கை, கண்புருவம், மூக்கு, கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் கோகுலம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற போது மாலை 5.30 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) சம்பவம் குறித்து எனக்கு யார் தகவல் அளித்தது என்றால் என் மாமா மகன் போன் மூலமாக தகவல் அளித்தார். நான் சம்பவயிடம் சென்றேனா என்றால் இல்லை. சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். இறந்தவர் என் மாமா என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy

Digitally signed by D.Myilswamy
Date: 2025.11.14 11:01:36 +0530

Judicial Magistrate No.II,
Mettur.